**OPEN ACCESS**

Manuscript ID: TAM-06032022-4620

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.11.2021

Accepted: 20.12.2021

Published: 01.01.2022

Citation:
Alibava, U. "Women in Islamic Tamil Sathagam Literature." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 3, 2022, pp. 11–16.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4620

*Corresponding Author:
alibavapkm@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Women in Islamic Tamil Sathagam Literature

**Dr. U. Alibava**
*Professor & Head*
*Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli*
https://orcid.org/0000-0002-2051-7002

**Abstract -** Minor Literary Genres add great value to Tamil Literature. More than 96 minor literary genres appeared and developed in Tamil. Islam also has got minor literary genres like other religions have in Tamil. There are more than 1800 Minor Islamic literary genres in Tamil strengthen Tamil Literature. 'Sathaga illakiyam' is one among them. A Literary work which has a poems of 100 Stanzas is called 'Sathagam'. This article brings out rare and valuable contents related to women which are registered in more than 30 Islamic sathagam Literature in Tamil.

**Keywords:** Literature, Minor Literary Geners, Sathagam Literature, Islam, Islamic Literature, Islamic Sathagam Literature.

**References**

1. Habib Mohamed K.V.S. (Editor), 1998. Vedavarikalum Thudarmozhikalum, Chennai : Islamiya Niruvanam Trust.
2. Syed Hamith Ali, 2002. Naalum Pazhga Nabimozhi Narppathu, Chennai, Islamiya Niruvanam Trust.
3. Jalil Ahusan Nathvee (Editor), 2000. Annal Nabigalar Vazhvinilea…, Nabimozhi Thoguppu, Chennai, Islamiya Niruvanam Trust.
4. Mohamed pin Ismail, (Editor) 2002. Nabigalarin Pon Mozhigal, Shahigul Pugari, Fifth Edition, Chennai, Rahmath Publications.

# இஸ்லாமியத் தமிழ்ச் சதக இலக்கியங்களில் பெண்கள்

***முனைவர் உ. அலிபாவா***
பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கியத்திற்குச் சிற்றிலக்கியங்களும் பெருமளவில் வளம் சேர்க்கின்றன. 96க்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் தமிழில் தோன்றிச் செழித்து வளர்ந்துள்ளன. எல்லாச் சமயங்களுக்கும் தமிழில் சிற்றிலக்கிய வகைகள் உள்ளதைப் போன்று இஸ்லாமிய மார்க்கத்திற்கும் சிற்றிலக்கியங்கள் உள்ளன. 1800க்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தமிழுக்கு அணி சேர்க்கின்றன. அவற்றுள் சதக இலக்கியமும் ஒன்று. நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கிய வகையே சதகமாகும். முப்பதுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச் சதக இலக்கியங்களில் பதிவாகியுள்ள பெண்கள் தொடர்பான அரிய கருத்து மணிகள் இடம்பெற்றுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், சிற்றிலக்கியம், இஸ்லாம், இஸ்லாமியச் சிற்றிலக்கியம், சதகம், சதக இலக்கியங்கள்.*

தமிழ் இலக்கியத்திற்குச் சிற்றிலக்கியங்களும் பெருமளவில் வளம் சேர்க்கின்றன. 96க்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் தமிழில் தோன்றிச் செழித்து வளர்ந்துள்ளன. எல்லாச் சமயங்களுக்கும் தமிழில் சிற்றிலக்கிய வகைகள் உள்ளதைப் போன்று இஸ்லாமிய மார்க்கத்திற்கும் சிற்றிலக்கியங்கள் உள்ளன. 1800க்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தமிழுக்கு அணி சேர்க்கின்றன. அவற்றுள் சதக இலக்கியமும் ஒன்று. நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கிய வகையே சதகமாகும். முப்பதுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச் சதக இலக்கியங்களில் பதிவாகியுள்ள பெண்கள் தொடர்பான அரிய கருத்து மணிகளை ஆய்ந்துரைக்கிறது இக்கட்டுரை.

பெண்கள் மதிக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமியக் கோட்பாடு. அவர்களைப் பற்றி இஸ்லாமியச் சதகப் புலவர்கள் பாடியுள்ளனர். பெண்கள் குறித்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அறிவுரை புகட்டியுள்ளனர்.

> **ஆண்களுக்குப் பெண்கள் மீது சில உரிமைகள் உள்ளன.**
> **பெண்களுக்கும் ஆண்கள் மீது சில உரிமைகள் உள்ளன (2:228).**

> **இறைநம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்களின்) விருப்பமின்றி (கட்டாயமாக) நீங்கள் உடைமையாக்கிக் கொள்வது ஆகுமானதல்ல (4:19)**

எனப் பெண்களைப் பற்றித் திருமறையும், ஒருவன் தன் பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்காமலும், கொடுமைப்படுத்தாமலும், ஆண் குழந்தையுடன் ஒப்பிடும்போது வேறுபாடு காட்டாமலும் இருந்தால் இறைவன் அவனைச் சுவனத்தில் நுழையச் செய்வான் (நபிகள் நாயகம் (ஸல்), நூல்: அபூதாவூத்) - (கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.,), வேதவரிகளும் தூதர்மொழிகளும், ப.165)

கல்வி பெறுவது (ஆண், பெண் ஆகிய) அனைத்து முஸ்லிம்களின் மீது கடமையாகும் (கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.,), வேதவரிகளும் தூதர்மொழிகளும், ப.165) என நபிமொழிகளும் மொழிகின்றன. பெண்களுக்கு அனைத்து உரிமைகளையும் அளித்து அவர்களை நாகரிகமாக நடத்த வேண்டுமென்பதை "இலட்சியப் பெண்" எனும் தலைப்பில் அப்துல் காதர் லெப்பை, தம்முடைய இறசூல் சதகத்தில்,

> **ஆண்களைப் போலவள் வெளியிலே செல்லுவாள்**
> **ஆடைகள் உடலை மூடும்;**
> **அழகிய தலைமூடி காலணி போடுவாள்,**
> **ஆபரணம் நீக்கி விடுவாள்**
> **வீண்கதை கூறாத வகையிலே முன்னேற்ற**
> **வேலையிற் பங்கு கொள்வாள்,**
> **வெளியிலும் உள்ளிலும் அவள் சேவை தன்னையே**
> **வேண்டிடும் சமூகம் என்றும்**
> **தூண்களைப் போலவள் குடும்பமே தாங்குவாள்,**
> **துலங்கிடும் கல்வி கற்பாள்,**
> **துன்பங்கள் வந்திடில் ஆணோடு சரிநின்று**
> **தூக்குவாள் வீர வாளை,**
> **ஈண்டிவை கொண்டபெண் இன்றுநம் தேவையே**
> **எவ்விதம் கண்டு நிற்போம்**
> *(பா.8)*

என்று சுட்டுவது, பாரதியின் புதுமைப் பெண்ணைப் போன்றே, இவருடைய இலட்சியப் பெண்ணும் இருக்கின்றாள் என்பதைக் காட்டுகிறது. மேலும் இவர் பெண்களுக்குச் சுதந்திரம் தான் இன்பம் பயக்கும் (இற.சத., பா.44) என்றும் கூறுகின்றார். "மங்கையர் மலர்ந்திட வேண்டும்; பெண் மகவைக் கொல்லக் கூடாது; பெண்ணைப் பேண வேண்டும்; உயிர் போன்ற பெண்கள் உலகில் இல்லையெனில் உயர்வில்லை" (சலவாத்துச் சதகம், பா.38), "மாதர் படிந்துயரை மடிக்க வேண்டும்" (சல.சத.,பா.96), "பெண்கள் பணிந்து நடக்க வேண்டும் (சல.சத.,பா.92) என மு. முஹம்மது தாஹா எடுத்துரைக்கிறார். நற்பெண்டீரியல்புகளைச் செய்யது புகாரிப் புலவர்,

> **மனஞ்சேர் விவேகமுந் தேகச் சுசீகரமு**
> **மாதவம் புரி செய்கையும்**
> **வன்மைதரு நற்குணமும் வரிசைபெறு நற்செயலு**
> **மதுரமிக் கினிய சொல்லும்**
> **இனஞ்சேர வாதரிக் கின்றகுல மாட்சியும்**
> **மீகையும் மாக மதிபோ**
> **லெழின்முக மலர்ச்சியும் மழைதுளி கடைக்கணு**
> **மில்லையென் னாத வியல்புங்**
> **கனஞ்சேர் கருங்கழற் காரிகை யொழுங்குள்ள**
> **கற்புநூன் முறைமை யோடே**
> **கணவனுக் குள்ளாய் வணங்கிவழு வாமனிறை**
> **காப்பர்நற் பெண்டீர் களாம்**
> ***(அப்துறகுமானறபிச் சதகம், பா.23)***

என்று சுட்டிக்காட்டுகிறார்.

## பெண்ணுக்கு அறிவுரை

பெண்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் அறிவுறுத்து கிறது; இஸ்லாமியச் சதகப் புலவர்களும் சுட்டுகின்றனர்.

தனது கணவன் திருப்தியோடும், மகிழ்வோடும் இருக்கும் நிலையில் ஒரு பெண் மரணம் அடைந்து விட்டால் அவள் சுவனம் புகுவாள் (திர்மதீ, ஹாகிம்), (சையித் ஹாமித் அலி, நாளும் பழக நபிமொழி நாற்பது, ப. 72) என்று நபிமொழி நவில்கின்றது. பெண்கள் கணவனைப் பேண வேண்டும் என்பதை,

> **கணவனைக் கடைசிவரைக் காத்துபுகழ் காணவே**
> **கதைகோடி யுலகிலு ளதால்**
> **கணவனைக் கடைசிவரைக் காத்துபுகழ்**

**காணவே**
**கருதுவீர் பெண்மணிகளே**
**துணையின்றி எவ்வுயிரும் வாழவிலை என்பதை**
**துணிவோடு எண்ணி குடியைத்**
**துணைதேடி ஒன்றுபட் டின்பமுற வேண்டுமாய்**
**தூதருரை உண்டு தெரிவீர்**
**மனைகூடி வாழ்ந்துவர மக்கள்சுக மாகிடும்**
**மறுமைக்கு மின்பமுளதே**
**மங்களக் கவிபாடி மாகவிஞன் வாழ்த்துதல்**
**மனைசேர்ந்த தம்பதியையே**
**(நாகூரார் சதகம், பா.4)**

**நேசமிகு கணவனை நினையா தகன்றபடி**
**நீலியென மாறி நிற்கும்**
**நெறியற்ற பெண்களை வெறிகொண்ட நாய்களை**
**நெருப்பிட் டெரித்தல் பிழையோ**
**வாசமிகு இல்லமதை வாய்ப்பாக வேகருதி**
**வாழ்ந்திடல் கடமை யன்றோ**
**(நாகூ.சத., பா. 78)**

என நாச்சிகுளத்தார் சுட்டுகிறார்.

உம் மனைவிக்குத் தீங்கிழைக்க நாடிய இவருக்குச்சிறையிலிடப்படுவதோ, நோவினை தரும் வேதனையைத் தருவதோ அன்றி, வேறு என்ன தண்டனை இருக்க முடியும்? (12:25) என்று திருமறையும்,

ஓர் இறைநம்பிக்கையுடைய கணவன் தன் இறைநம்பிக்கையுடைய மனைவியை வெறுக்க வேண்டாம். அவளுடைய ஒரு பழக்கம் அவனுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவளுடைய வேறு பழக்கங்கள் அவனுக்கு மனநிறைவு அளிக்கக் கூடும் (முஸ்லிம்) (ஜலில் அஹ்ஸன் நத்வீ (தொ.ஆ.,), அண்ணல் நபிகளார் வாழ்வினிலே.., நபிமொழித் தொகுப்பு, ப.134).

என்று நபிமொழியும் இயம்புகின்றன. நாச்சிகுளத்தார்,

**பெண்ணை வெறுத்துமே பித்தரென வாழ்ந்திடில்**
**பெருமைக ளறுந்து விடுமே**
**பெண்ணை வெறுப்பதாய்க் கூறிபின் குடிசையில்**
**பிணியோடு புகுதல் நலனோ?**
**கண்ணை யிழப்பினும் பெண்ணை யிழந்திடேல்**
**கலிகால லோகமல வோ?**
**(நாகூ.சத., பா. 78)**

எனப் பகர்கிறார். பெண்ணிடம் வரதட்சணை வாங்கக் கூடாது, மாறாக “மஹர்” (திருமணத்தின்போது மணமகன் தன் சார்பாக மணமகளுக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய பணம் அல்லது பொருள்) கொடுத்து மணமுடிக்க வேண்டுமென்பதை,

**மேலும் பெண்களுக்கு மஹ்ரை மனமுவந்து அளித்து விடுங்கள் (4:4)**

என்று திருமுறை வலியுறுத்துகிறது. இதனை நாச்சிகுளத்தார்,

**பெண்ணுக்குச் சமஉரிமை உண்டென்று கண்டபின்**
**பெண்ணிடம் பொன் கேட்பதோ?**
**பெண்ணாகத் தோன்றிடப் பெருந்தவம் வேண்டுமாம்**
**பேணுதல் கடமை யன்றோ**
**கண்ணுக்கு நல்கிடும் உதவிபோல் பெண்ணுக்குக்**
**கண்டிப்பாய் நல்க வேண்டும்**
**காசையே குறிவைத்துப் பெண்களைப் பேசுதல்**
**கயவரின் செயலதன்றோ**
**(நாகூ.சத., பா.43)**

என்று மொழிகிறார்.

## பெண்டிர் கொள்ள வேண்டா இயல்புகள்

பெண்கள் நற்குணங்களால் நிறைந்து விளங்க வேண்டுமென்று இஸ்லாம் கூறுகிறது. இவ்வாறில்லாதவர்களை இஸ்லாம் கடிந்துரைக்கிறது. சதகம் பாடிய புலவர்களும் கடிகின்றனர்.

**ஒழுக்கமான பெண்கள் கீழ்ப்படிந்தே**
**நடப்பார்கள் (4:34)**

என்கிறது திருமறை.

கணவன் பார்க்கும்போது அவனை மகிழ்விப்பவள், கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவள், தன் விஷயத்திலும் பொருளைச் செலவிடும் விஷயத்திலும் கணவனுக்கு விருப்பமில்லாத போக்கை மேற்கொள்ளாதவள் இப்பண்புகள் உடைய பெண்ணே சிறந்த மனைவி ஆவாள் (நூல்: நஸயீ) (நபிகளாரின் பொன் மொழிகள், ஸஹுல் புகாரி, ஐந்தாம் பாகம், ப. 956). என்று உரைக்கிறது நபிமொழி. நற்குணமில்லாப் பெண்ணை அப்துல் காதர் லெப்பை அநாகரிகப் பெண் எனும் தலைப்பில் அமைந்த பாடலில்,

**அங்கங்கள் தெரியவே கண்ணாடி போன்றபட்**
**டாடைகள் மேல தாக்கி**
**ஆண்களின் பார்வையில் அஞ்சுகந் தோகையென்**
**றாடிடும் கோல மாக்கி**
**மங்கையே ஆண்களின் சுகபோக மென்றொரு**
**மாறாத பெருமை சூட்டி**
**மாடாடு போலவே கூடிக் குலாவிட**
**மன்றங்கள் பலவுஞ் செய்து**
**சங்கையில் லாமலே பெண்ணை நாற்சந்தியில்**
**தள்ளிவிடல் நாக ரிகமா?**
**சாற்றுவீர்! வேறுநற் பணிபுரிய பெண்ணினம்**
**சற்றேனுந் தகுதி யிலையா?**
**எங்குமே விடுதலை என்றுபறை சாற்றுவார்**
**எண்ணத்தில் இவை என்னவோ?**

**(இற.சத., பா.7)**

என்று குறிப்பிடுகிறார். இன்னொரு பாடலில் இவர்,

**“பெண்ணொன்றை வாயினாற் பேசி**
**விட் டாலது**
**பேராபத் தாக வருமே**

**(இற.சத., பா.16)**

என்றும் சுட்டுகிறார். செய்யிது புகாரிப் புலவர் துற்பெண்டீர்களின் இயல்புகளை,

**“ஒடுக்கந் திடுக்கமில் லாமலெக்**
**கண்டமாயொண்**
**படிக்குமிஞ் சின மிடாவா**
**யோடியம் பொய்புரணி சாடிசண் டை**
**கள்களவு**
**மூர்ப்பழிக் கஞ் சாமையும்**
**துடுக்குமொழி யுங்கடு கடுத்தமுக முந்துடி**
**துடித்தமே லுதடும் வடவை**
**தோற்றும்விழி யுங்கொடிய கூற்றென வடர்ந்தித**
**ழுதுக்கிமென் றிடு சுணைப்பும்**
**வடுக்களியல் புங்குடி நெடுக்குநினை வுஞ்சிறிது**
**மானநா ணங்க ளில்லா**
**வண்டிகளை மனைவியாய்க் கொண்டமன வாளனு**
**மயக்கினா லடுமை யாவான்**
**அடுக்கவின மொட்டாத துற்பெண்டி ராகிர்ஜமா**
**னதனிலே மெத்த வுண்டாம்**

**(அப்து.சத., பா.24)**

என மொழிகிறார். நாச்சிகுளத்தார்,

**பெண்ணுடைய சொல்லினுக் கடிமையென**
**வாழ்ந்திடும்**
**பித்தருக் கருள தில்லை**

**(நாகூ.சத., பா. 34)**

என்கிறார்.

## பர்தாவும் பெண்ணடிமையும்

பெண்ணடிமைத்தனம் கூடாது என்று சொல்லுகின்ற இஸ்லாம், பெண்ணுக்குப் பாதுகாப்பான அரண்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் “பர்தா” (பெண்கள் உடலை மறைக்கும் துணி) என்கிறது. “பர்தா” அணிய வேண்டுமென்கிற இஸ்லாம் யார் யார்முன் அணிய வேண்டாம் என்பதையும்,

“நீங்கள் எதையேனும் வெளிப்படுத்தினாலும், அல்லது அதனை மறைத்தாலும் திண்ணமாக அல்லாஹ் ஒவ்வொன்றையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (நபியின் துணைவியரான) அவர்கள் மீது தம்முடைய தந்தையார், தம்முடைய புதல்வர்கள், தம்முடைய சகோதரர்கள், தம்முடைய சகோதரர்களின் புதல்வர்கள், தம்முடைய சகோதரிகளின் புதல்வர்கள், தம்முடைய (மார்க்கத் தோழியரான) பெண்கள் மற்றும் தம் வலக்கரம் உடைமையாக்கிக் கொண்டவர்கள்

(ஆண் அடிமைகள்) ஆகியோர் விஷயத்தில் பர்தாவைக் கைவிடுவதில் குற்றமில்லை. அல்லாஹ்வுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான் (33: 53, 54) என்று எடுத்துரைக்கிறது. அப்துல் காதர் லெப்பை அடிமைப்பெண் எனும் தலைப்பில்,

**சுற்றவர வேலியும் மதிலுமாய்க் கட்டியொரு சுந்தர மனை யமைத்துச்**
**சொகுசான மணைகளும் அணைகளும் போட்டதில்**
**சுந்தரி யவளை வைத்து**
**மற்றவரை நோக்காத வகையிலே தலைமீது மறைந்திடுந் திரையு மிட்டு**
**மண்ணையும் விண்ணையும் அன்றியொரு காட்சியும்**
**மருவிடா வகையுஞ் செய்து**
**பெற்றவரின் வார்த்தையை அன்றியொரு வார்த்தையும்**
**பேசாத வகையில் வைத்துப்**
**பெருமைதரு காதையும் கண்ணையும் மூடஒரு**
**பெரியஉட் டிரையுந் தூக்கி**
**இற்றைவரை பெண்ணினம் இருந்து வருநிலையினை**
**என்னென்று சொல்ல வல்லேன்**
**(இற.சத., பா.6)**

என்று பெண்ணடிமைத்தனத்தைச் சாடுகிறார். இப்பாடலில் பர்தாவைப் பற்றி இவர் சொல்லும் கருத்து இஸ்லாம் சுட்டாத கருத்தாக இருக்கிறது. ஆகவே இக்கருத்து இஸ்லாம் கூறும் கருத்துக்கு ஏற்புடையதாக இல்லை.

## முடிவுகள்

இஸ்லாமியத் தமிழ்ச் சதக இலக்கியங்களில் பெண்களுக்கான கல்வி முதலிய சமஉரிமைகள் எடுத்துரைக்கப்படுவதுடன் பெண்கள் மதித்துப் போற்றப்பட வேண்டியவர்கள் எனும் இஸ்லாமியக் கோட்பாடுகளும் கொள்கை களும் சுட்டப்பட்டுள்ளன. பெண்கள் தம்மையும் குடும்பத்தையும் எவ்வாறு பேண வேண்டும் என்பதைச் சுட்டும் இஸ்லாமியச் சதக இலக்கியங்கள் பெண்கள் கொள்ள வேண்டிய, தள்ள வேண்டிய இயல்புகளையும் எடுத்துரைக்கின்றன.

## துணை நூற்பட்டியல்

1. ஹபீப் முஹம்மத் கே.வி.எஸ். (தொ.ஆ.,), 1998. வேதவரிகளும் தூதர்மொழிகளும், சென்னை : இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்.
2. சையித் ஹாமித் அலி, 2002. நாளும் பழக நபிமொழி நாற்பது, சென்னை : இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
3. ஜலில் அஹ்ஸன் நத்வீ (தொ.ஆ.,), 2000. அண்ணல் நபிகளார் வாழ்வினிலே.., நபிமொழித் தொகுப்பு, சென்னை : இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
4. முகம்மது பின் இஸ்மாயில், (தொ.ஆ.,), 2002. நபிகளாரின் பொன் மொழிகள், ஸஹூல் புகாரி, ஐந்தாம் பாகம், சென்னை : ரஹ்மத் பப்ளிகேசன்ஸ்.